08.01.2024

கூடுதல் அமர்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.

அமர்வு வழக்கு எண். 205/2018

அ.சா. 9

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சி.அன்பரசன் | | |
| த/பெ | செல்லப்பா | மதம் | |
| கிராமம் | விருத்தாச்சலம் | தொழில் | |
| தாலுக்கா | விருத்தாச்சலம் | வயது | 35 /2024 |
| மாவட்டம் | கடலூர் | தேதி | |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை**

நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். தற்போது நான் விருத்தாச்சலம் மதுவிலக்கு அமல் பிரிவில் தலைமை காவலராக பணி செய்து வருகிறேன். கடந்த 2014ம் வருடம் விழுப்புரம் இருப்பு பாதை காவல் நிலையத்தில் காவலராக பணியிலிருந்தேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். இந்த வழக்கில் இறந்துபோன ஜெயவேல் என்பவரை தெரியும். அ.சா.2 புகார்தாரர் அசாரியாவை எனக்கு தெரியாது. அ.சா.8 சாமூண்டிஸ்வரியை எனக்கு தெரியும். கடந்த 05.05.2014ந் தேதி 21 மணி முதல் மேற்படி காவல் நிலையத்தில் இரவு பாரா அலுவலில் இருந்தேன். 06.05.2014ந் தேதி காலை சுமார் 7 மணியளவில் ஒரு நபர் தனது பர்ஸ் களவு போனதாக புகார் அளிக்க வந்திருந்தார். நான் அவரிடம் விசாரித்தபோது சம்பவ இடமானது சட்டம் ஒழுங்கு காவல் நிலைய எல்லைக்குட்பட்டது போல் தெரியவர நான் அவரிடம் விழுப்புரம் நகர காவல் நிலையத்தில் புகார் அளிக்குமாறும் இந்த காவல் நிலையத்தில் போதிய காவலர்கள் இல்லை என்றும், என்னால் தற்போது காவல் நிலையத்திலிருந்து வெளியில் வரஇயலாது என்றும், கொஞ்சம் நேரம் காத்திருந்தால் அதிகாரிகள் வந்துவிடுவார்கள் என்று கூறினேன். ஆனால் அதன் பிறகு அவர் அங்கிருந்து சென்றுவிட்டார். 8 மணிக்கு நான் பாரா பணி முடிந்தவுடன் சாமூண்டிஸ்வரியிடம் பாரா பணியை ஒப்படைத்துவிட்டு நான் சென்றுவிட்டேன். மீண்டும் மதியம் 14 மணிக்கு காவல் நிலையம்

வந்தபோது கதவின் அருகே விற்பனையாளர் துரை என்பவர் கைதிகள் அறைக்கு வெளியே ஜெயவேல் என்பவரும் அமர்ந்திருந்தார்கள். நான் ஜெயவேல் இடம் எதற்காக இங்கு அமர்ந்திருக்கிறாய் என்று கேட்டேன். அதற்கு என்னுடன் பணி புரியும் காவலர் திருக்குமரன் (1ம் எதிரி) காலையில் பர்ஸ் காணவில்லை என்று புகார் கொடுக்க வந்தாரே, அவரின் பர்சை திருடியவன் இவன் தான் என்று என்னிடம் கூறினார். நான் ஜெயவேல் இடம் போலீசுடன் தொடர்பு வைத்துக்கொண்டு இந்த வேலையெல்லாம் தேவையா என்று கேட்டேன். பிறகு நான் பிளாட்பார்ம் பணிக்கு சென்றுவிட்டேன். இரவு பணி முடித்து இரவு 20.30மணிக்கு ஓய்வு அறைக்கு சென்று உடை மாற்றிக்கொண்டு காவல் நிலையத்திற்கு வந்தபோதும் ஜெயவேலும், துரையும் காவல் நிலையத்தில் இருந்தார்கள். ஜெயவேல் இடம் சாப்பிட எதாவது வேண்டுமா என்று கேட்டபோது அவர் இரண்டு தோசை வேண்டும் என்று கேட்டார். நான் வாங்கிகொடுத்தேன். துரைக்கு ஏற்கனவே அங்கு சாப்பாடு இருந்தது. அதை அவரிடம் எடுத்து கொடுத்துவிட்டு நான் ஓய்வு அறைக்கு சென்றுவிட்டேன். மறுநாள் 7.05.2014ந் தேதி காலை சுமார் 8.30 மணிக்கு எனக்கு 5ம் எதிரி காவலர் ஸ்ரீநாத் என்பவர் கைப்பேசி மூலம் தொடர்பு கொண்டு ஏன் இன்னும் பணிக்கு வரவில்லை என்று கூப்பிட்டார். அப்போது மழை பெய்துகொண்டிந்ததால் வரமுடியவில்லை . இதோ வருகிறேன் என்று சொல்லி 9.30 மணிக்கு நான் பணிக்கு காவல் நிலையத்திற்கு வந்தபோது ஜெயவேல் காவல் நிலையத்தில் அசதியாக படுத்திருந்தார். நான் அவரை தட்டிஎழுப்பி எதற்கு இப்படி படுத்திருக்கிறாய் என்று கேட்டேன். அவர் தன்னால் முடியவில்லை என்று சொன்னார். நான் அவரை தூக்கி காலில் சாய்த்து உட்காரவைத்து தண்ணீர் கொடுத்தேன். அவர் குடிக்கவில்லை. அப்போது அங்கிருந்த காவலர் திருக்குமரனிடம் எதாவது ஜீஸ் வாங்கிகொண்டுவா என்று சொன்னேன். அவர் ஜீஸ் வாங்கிகொண்டு வந்தார். அவர் அதை இரண்டு வாய் குடித்தார். அப்போது வெளியில் நின்று கொண்டிருந்த ஆய்வாளர் உள்ளே வந்து ஜெயவேலிடம் என்னடா பன்னுது, என்ன ஆச்சி உடம்புக்கு சொல்லுடா, சொல்லுடா என்று கேட்டார். ஜெயவேல் முடியவில்லை என்னை விடுங்கள் என்று சொல்லிவிட்டு படுத்துக்கொண்டார். நான் ஆய்வாளரிடம் அய்யா அவரை மருத்துவமனைக்கு அழைத்துச்செல்லலாம் என்று கூறினேன். அப்போது ஸ்ரீநாத் என்னிடம் நமக்கு பிளாட்பார்ம் பணிதானே, நாம் அங்கு போவோம் என்று கூறினார். இப்படியே விட்டுவிட்டு எப்படி போவது என்று அவரிடமும் கூறினேன். அப்போது ஆய்வாளர் உடனே

திருக்குமரனிடம் வண்டியை முன்வாசல் வழியாக எடுத்துக்கொண்டுவா என்று கூறினார். திருக்குமரன் காவல் நிலையத்தின் டாடா சுமோ ஜீப்பை எடுத்து வந்து நிறுத்திவிட்டு வந்து திருக்குமரன் ஜெயவேலின் தோள்பட்டையையும் நான் ஒரு காலையும், ஸ்ரீநாத் ஒரு காலையும் பிடித்து தூக்கிவந்தோம். அப்போது ஜெயவேல் மலம்கழித்துவிட்டார். அவரது தலை தொங்கிவிட்டது. அப்படியே தூக்கி ஜீப்பின் பின்சீட்டில் உட்காரவைத்தோம். திருக்குமரன் ஜீப்பை ஓட்ட ஆய்வாளர் முன்சீட்டிலும், நானும், ஸ்ரீநாத்தும் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் போது ஆய்வாளர் அவர்கள் கைப்பேசியில் நடந்த விசயத்தை குறித்து மேல் அதிகாரிகளிம் பேசிக்கொண்டே வந்தார். முண்டியம்பாக்கம் போனவுடன் இரயில்வே யார்டுக்கு செல்லும் வழிக்கு முன்பே வாகனத்தை திருக்குமரனிடம் ஆய்வாளர் நிறுத்த சொல்லிவிட்டு ஆய்வாளர் மருத்துவமனைக்கு சென்று மருத்துவரை பார்த்து விட்டு நான் தகவல் சொல்கிறேன் நீங்கள் வாருங்கள் என்று திருக்குமரனிடம் சொல்லிவிட்டு மருத்துவமனை உள்ளே சென்றுவிட்டார். சிறிது நேரம் கழித்து அவர் சுமோவை எடுத்துவர சொன்னார். அதன் பிறகு மருத்துவமனை ஸ்ட்ரக்சரில் வைத்து மருத்துவர் அவரை பரிசோதனை செய்து ஜெயவேல் இறந்துவிட்டதாக தெரிவித்தார். அப்போது எங்கள் காவல் நிலையத்தில் பணி புரியும் தலைமை காவலர் பாலமுருகன், காவலர் லோகேஸ்குமார் ஆகியோர் மருத்துவமனைக்கு வந்துவிட்டார்கள். பிரேதத்தை மருத்துவமனையில் வைக்க அந்த காவலர்களிடம் மருத்துவர்கள் கையெழுத்து கேட்டபோது அவர்கள் கையெழுத்து செய்ய மறுத்துவிட்டனர். ஆய்வாளர் நானே கையெழுத்து போட்டுவிடுகிறேன் என்று சொல்லி கையொப்பம் செய்தார். அதன் பிறகு பிரேதத்தை சவக்கிடங்கில் வைத்திருந்தனர். அதன் பிறகு காவல் நிலையம் வந்தோம். அதன் பிறகு அங்கு டி.எஸ்பி, குற்றவியல் நீதித்துறை நடுவர் ஆகியோர் வந்து விசாரித்தார்கள். ஜெயவேல் இறப்பு சம்மந்தமாக ஆய்வாளர் அவர்கள் தனியாக ஒரு புகார் கொடுத்தார். அதில் ஜெயவேல் 7.05.2014 அன்று காலை பர்சை பிடுங்கி ஓடிச்சென்றதாகவும், அப்போது அவரை பொதுமக்கள் அடித்துபிடித்து காவல் நிலையத்தில் ஒப்புவித்தாகவும் அதன்பேரில் அவர் மீது ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டது. அன்று நிலைய பாரா பொறுப்பில் இருந்தவர் சித்ரா என்ற பெண் காவலர் ஆகும். ஆனால் அவரை அன்று பாரா பணியில் இல்லாதது போல் காட்டி என்னுடன் பிளாட்பார்ம் பணியில் இருந்த ஸ்ரீநாத்தை பாரா அலுவலில் இருந்ததாக காட்டினார். அதற்கு நான் தான் பிரேத பரிசோதனைக்கு

செல்லவேண்டும் என்று சொன்னார். அப்போது எனக்கு பணி முடிந்துவிட்டது. எனவே நான் சென்றுவிட்டேன். மறுநாள் காலை நான் தபால் வாங்கிகொண்டு பிரேத பரிசோதனைக்கு சென்றேன். உடனிருந்து பிரேத பரிசோதனை முடியும் வரை அங்கிருந்தேன். அப்போது அங்கே என்னுடன் இருந்த ஸ்ரீநாத், ஆய்வாளர் வாசுதேவன் ஆகியோர்களுக்கு அப்போதே பணியிடை நீக்க உத்தரவை வழங்கினார்கள். பின்னிட்டு லோகேஸ்குமார், பாலமுருகன், திருக்குமரன் ஆகியோர்களுக்கு பணியிடை நீக்க உத்தரவை வழங்கியதாக நான் தெரிந்துகொண்டேன். மேற்படி விவரங்களை விழுப்புரம் சிபிசிஐடி ஆய்வாளரும், வேலூர் சிபிசிஐடி ஆய்வாளர் அவர்களும் விசாரிக்கும்போது சொல்லிக்கொண்டேன்.

**<u>எதிரிகள் தரப்பின் குறுக்கு விசாரணை</u>**

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணையை ஒத்திவைக்க மனு தாக்கல் செய்யப்பட்டது. மனு அனுமதிக்கப்பட்டது.